# ஔவை நாடகப் பெண்ணியப் புரிதலும் ஔவைக் குறியீடும்

**முனைவர் ச.பிரியதர்சினி**
தமிழ்த்துறைத் தலைவர் (பொ),
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தலைசிறந்த பெண் புலவர்களில் ஒருவராக மதிக்கப்படுபவர் ஔவை. ஔவையார் என்னும் பெயர்கொண்ட பெண் புலவர்கள் பலர் வாழ்ந்திருக்கலாம் என்றும் வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த ஔவையார்கள் காலப்போக்கில் ஒருவராகி விட்டனர் என்றும் கருத்துக்கள் நிலவுகின்றன. ஔவையார் சங்ககாலத்தில் மிகவும் புகழ்பெற்ற பெண்பாற் புலவராகத் திகழ்ந்துள்ளார். அதனால் தமிழகத்தில் வழிவழியாகச் சிறப்புடைய பெண்பாற் புலவர்கள் பலர் ஔவை என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளனர் என்று மு.அருணாச்சலம் ஆறு ஔவையார்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மு.வரதராசனார் தமது இலக்கிய வரலாற்றில் பல ஔவையார்கள் காலந்தோறும் வாழ்ந்து வந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இங்ஙனம் ஒரு புலவர் பெற்ற புகழ் காரணமாகப் பின்வருபவர்க்கு அதேப் பெயரை இட்டு வழங்குவதில் வியப்பொன்றும் இல்லை என்கிறார் தமிழண்ணல். சங்ககால ஔவையார் இடைக்காலத்தில் தோன்றிய ஔவையார் இருவருமே சிறப்புக்குரியவர்களாகப் பேசப்படுகிறார்கள்.

## சங்ககால ஔவை

“காலந்தோறும் ஔவையார் புகழ் விளங்கத் தொடங்கி வைத்தவர் சங்ககால ஔவையாரே” என்பார் தமிழண்ணல். சங்ககால ஔவைப் பற்றிச் சங்கப் பாடல்களின் வழித் தெளிவாக அறியாலம். ஔவையார் சங்ககாலத்தில் மிகவும் புகழ்பெற்றப் பெண்பாற் புலவராத் திகழ்ந்துள்ளார் என்பதை அவரது சங்கப்பாடல்களின் வழியாக அறிய முடிகிறது. ஔவையார் பாடியனவாக சங்க இலக்கித்துள் 59 பாடல்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் அகப் பாடல்கள் 33 ஆகும்.

நீதி நூல் கால ஔவை அருந்தமிழ் தொண்டும், அமைதித் தொண்டும் ஆற்றிய, சங்கால ஔவை பெற்ற புகழினும் மிகு புகழ் பெற்றவர். இடைக்காலத்தில் வாழ்ந்து, நீதி நூல்கள் பாடித் தமிழர் உள்ளந்தோறும் இடம் பெற்ற ஔவை ஆவார். இவரை நீதி நூல் காலத்து ஔவை என்பார் தமிழண்ணல். ஔவை படைத்த நீதி நூல்கள் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நூல்கள் ஆகும். இந் நீதி நூல்களில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் அறங்கள், நீதிக் கருத்துக்கள் போன்றன சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் பயன்படும்விதத்தில் அமைந்துள்ளன.

**இன்குலாப்பின் ஔவை**

'இன்குலாப்பின் ஔவை' நாடகம் சங்ககால ஔவை, நீதி நூல் கால ஔவை ஆகியோரின் பாடல்களை மையமாகக்கொண்டுதான் அமைந்துள்ளது இவ்விரு ஔவையார்களின் பாடல்களையும், சங்ககால ஔவை எதிர்ப்பட்ட நிகழ்ச்சிகளையும் மையமாகக்கொண்டு இந்நாடகம் அமைகிறது. ஔவையின் பாடல்களையும் நிகழ்ச்சிகளையும் மையமாகக் கொண்டிருந்தாலும், ஔவையின் தோற்றத்திலும், அவளது உணர்வுகளிலும் புதிய மாற்றத்தை ஆசிரியர் செய்திருக்கிறார். நாடகத்தில் மூன்று வகையான ஔவைப் பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. 'மரபுகளைப் பின்பற்றும் ஔவை', 'மரபுகளை மீறும் ஔவை', 'தற்கால ஔவை.

ஔவை நாடகத்தில் ஔவை இளம்பெண்ணாக உருவாக்கப்பட்டிருக்கிறாள். மேலும், ஆண்களுடனும், பெண்களுடனும் இணைந்து ஆடலும், பாடலும் புரிபவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். நீதி இலக்கியம் படைத்த ஔவையின் சார்பாகவே இவளும் படைக்கப்பட்டிருக்கிறாள். மரபுகளைப் பின்பற்றுகிற ஔவைப்பாட்டியாகவே இவள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறாள். பெண்ணானவள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறாள். மேலும், 'பெண்ணுக்கு உலகம் வீடுதான். அவள் தந்தைக்கும் கணவனுக்கும் மட்டுமல்ல. வயசான காலத்திலே மகனுக்கும்கூடக் கட்டுப்பட்டுக் கெடக்கணும். அப்பத்தான் ஆண்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்' (ப.15) என்று அறிவுறுத்துகிறார்.

பெண்ணானவள் ஆணைச் சார்ந்து அவனது பாதுகாப்பில்தான் வாழ வேண்டும். மேலும் கணவனுக்குக் கட்டுப்பட்டவளாக, கற்புடைய பெண்ணாகவும் இருக்கவேண்டும் இப்படியெல்லாம் பெண்ணானவள் இருந்தால்தான் குடும்பத்துக்கு ஏற்ற மனைவியாய் இருக்க முடியும் என்ற அறிவுறுத்தலின் மூலமாக நாடகம் அறிமுகமாகிறது. இது முதல் நிலை ஔவை. மரபுகளை மீறுகின்ற ஔவை இளம்பெண்ணாக அறிமுகப்படுத்தப்பட்டிக்கிறாள்.

**மூடிய பழமைத் தூசியை விளக்கி**
**முகத்தில் ஒரு நிலவைத் துலக்கி**
**ஏடினி காணாத எழுத்தில் இருந்து**
**எழுந்து வருகிறாள் இன்னிசை விருந்து**
**பழகிய வாழ்க்கையைப் பாடலில் வார்த்து**
**பசப்புதல் இல்லாத சொற்களில் கோத்து**
**அழகிய ஔவைப் பாடினி வந்தாள்**
**அறம் போதியாமல் பாடினி வந்தாள்**
**தடிஇலை நரைஇலை தரையினில் விழிஇலை**
**விடுதலை நடையுடன் நெடுவழித் தொடர்கிறாள்**
**பாடினி வந்தாள் பாடினி வந்தாள்**
**பாட்டும் கூத்துமாய்ப் பாடினி வந்தாள் (ஔவை.ப.21)**

என்னும் பாடல் அடிகள் மூலம் இளைய ஔவையின் அறிமுகம் பாடினி என்ற தோற்றத்தோடு அறிமுகமாகிறாள். இந்த ஔவை அழகானவள், இளமையானவள் என்பதைக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். இவள் சங்ககால ஔவையின் வார்ப்பாகவே படைக்கப்பட்டிருந்திருந்தாலும், மறைக்கப்படுகின்ற உணர்வுகளை வெளிப்படையாகச் சொல்கின்றவளாக வெளிப்படுகிறாள். ஆண் - பெண் நட்பு இயல்பாதல் அதியமானுடன் அவள் கொண்டிருந்த நட்பு ஆகியனவற்றைச் சங்கப்பாடல்கள் வழி அறிகிறோம். இன்குலாப்பின் ஔவை நாடகத்தில் அதியமானுடன் ஔவை நல்ல நட்பு கொண்டிருந்தாள் என்று அறியமுடிகிறது. ஆண் பெண்நட்பு இயல்பானது என்ற கருத்தை வலியுறுத்தவே இதைப் படைத்தார். தடி ஊன்றி வரும் ஔவையாரும் நடனமாடி வரும் ஔவையாரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்கின்றனர். ஔவையார் - (மூக்கை மூடியபடி) என்னையா குடிக்கச் சொல்கிறாய்? ஆத்திச்சூடியும் கொன்றை வேந்தனும் யாத்த வாயில் நாறுங்கள்ளா? நல்வழி பாடிய நான் கள் வழியில் களங்கப்படுவேனோ?

ஔவை - இது என் காலத்துப் பழக்கம்…தனித்துக் குடிப்பதில்லை. கடைசியாக அதியனும் நானும் ஒன்றாகக் குடித்தோம் (ப.117). என்று அதியமானுடன் ஔவை இணைந்து கள் குடித்து இன்புற்றதை நீதி நூல் கால ஔவையிடம் வெளிப்படையாகக் கூறுவதைக்கொண்டும் அதியமானும் ஔவையும் தோழமைக் கொண்டிருந்ததை உணரலாம்.

சமுதாயம் பெண் என்பவள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அக்கட்டுப்பாடுகளின் ஒர் அம்சமே முதல் நிலை ஔவை. இரண்டாமவள் இதை மீறுகிறாள்.

பெண் என்பவள் மேற்சொன்னவாறுதான் நடந்துகொள்ள வேண்டும் என்று வாதாடுகிறாள். பாணர் கூட்டத்தைச் சேர்ந்த இளைஞனிடம் காதல் உணர்வைக் கட்டுப்படுத்தத் தெரியாதவளாகப் பெண் இருந்தாலும் கட்டுப்படுத்தித்தான் இருக்கவேண்டும். என்ற வாதம் பாணர் கூட்டத்தினரிடையே நடக்கின்றது. இவ்விவாதம் தற்காலத்திற்கும் மரபுக்கும் உள்ள முரணை விவாதிக்கிறது. நாடக ஆக்கம் விவாதத்தை நிகழ்த்திக்காட்டும் விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

**தற்கால ஔவை**

தற்கால ஔவை இளம்பெண்ணாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். இவள் கவிதைப் புனைவதில் திறம் படைத்தவளாக இருக்கிறாள். இன்றையப் புதுமைப் பெண்ணின் மாதிரியாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். புரட்சிப் பெண்ணாக வலம் வருகிறாள். இன்றையச் சூழலில் பெண் எப்படி இருக்கவேண்டும் என்பதை அவள் பின்வருமாறு வெளிப்படுத்துகிறாள்.

**காற்றெல்லாம் தென்றலென்றும்
ஒலியெல்லாம் கீதமென்றும் எண்ணியபடி
சிறகுகளை அகலவிரித்து
சிறகடிக்க முடியாது என் பெண்ணே!
வெந்தது புண்ணாய்
வலியெடுக்கும் இதயத்துடன்
வாழ்தலும் முடியாது
எழு!
உள்ளே அனலாய்
எரிந்துக் கொண்டிருக்கும்
பூமியின் வடிவாய்
விரிந்து எழு!!
பொட்டும் பிறவும்
அலங்கரிக்கும்
மேனியழகு உன் அழகல்ல
வெறியும் திமிரும்
அதிகாரமும்
உடைந்து சிதற எழுந்து நில்
உன்னை மீறிய எந்தக் குறியும்
உனது உடலைத் தீண்டாதவாறு
உயிர்த்தெழு. (ஔவை.ப.120)**

இவ்வடிகள் தற்காலப் பெண்களுக்கு இன்குலாப்பின் குரலாக உள்ளது. இறுதியாக, இச்சமுதாயத்தில் ஆணுக்கு அடங்கி, ஒடுங்கிக் கட்டுப்பட்டவளாக வாழ்தல் முடியாது. அவள் அலங்காரப் பொம்மையாக இருக்கக்க முடியாது என்பதற்கு அறைகூவலாக உள்ளது. இது ஒட்டுமொத்தப் பெண்களுக்குமான உரிமையின் குரலாக ஒலிக்கிறது. அறியாமை நீங்கி, அச்சம், மடம் தவிர்த்து அறிவார்ந்த நிலையில், விழிப்புணர்வுடன் அதிகாரமாய்த் தன்னியல்புடன் சுதந்திரமாகச் செயலாற்ற முனைய வேண்டும் என்கிறாள் இந்த ஔவை.

இன்குலாப்பின் ஔவை பாத்திரங்கள் மூன்றும் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்கின்றனர். மரபுகளைப் பின்பற்றுகின்ற நீதிநூல் கால ஔவை தனக்கென்று சொந்தக் கருத்துக்கள் இல்லாதவளாக ஆணாதிக்கச் சமுதாயம் கற்பித்த அறங்களைத் தனது நடையில் மீண்டும் சொல்பவளாகத்தான் படைக்கப்பட்டிருக்கிறாள். மரபுகளை மீறுகின்ற சங்ககால ஔவை தனது உணர்வுகளை, மறைக்காமல் வெளிப்படுத்துகின்றவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். தற்கால ஔவை பெண்ணியச் சிந்தனைகளை முழுமையாக உணர்ந்த நிலையில் புதுமைப் பெண்ணின் பிரதநிதியாக இருவருக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுபவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். பெண்களின் ஒடுக்குமுறைகளை அடையாளப்படுத்தி கால மாற்றத்தில் பெண்களின் மீதான கருத்துநிலை மாற்றங்களைக்கூறுகிறார். இம்முயற்சி தமிழ் அரங்கத்தில் புதிய பரிமாணங்களைப் பெற்றுள்ளது.